பக்கங்கள் 18+3

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஐப்பசி 09 சனிக்கிழமை 26.10.2024 | அதிர்வு 86

## எல்பிட்டிய பிரதேச சபை தேர்தல் வாக்களிப்பு நிறைவு

### வாக்கெண்ணும் பணிகள் ஆரம்பம்

காலி மாவட்டம், எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலுக்கான வாக்கெடுப்பு நடவடிக்கைகள் இன்று

02 ▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# தமிழரசும் முற்போக்குக் கூட்டணியும் வெற்றி பெறுவது காலத்தின் கட்டாயம்

## விசேட அறிக்கையில் மனோ சுட்டிக்காட்டு

வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் முற்போக்குக் கூட்டணியும், இலங்கைத் தமிழரசுக் கட்சியும் வெல்வது காலத்தின் கட்டாயம் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் இன்று விடுத்துள்ள விசேட அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ள தாவது:-

“ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இந்நாட்டின் தேசிய இன பிரச்சினை என்ற தீரா சவாலுக்குத் தீர்வாக முன்வைத்துள்ள ஒரே யோசனை, 2015 முதல் 2018 வரை நல்லாட்சியில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து முன்னெடுத்த புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கும் நோக்கிலான சர்வகட்சி கலந்துரையாடலை முன்னேடுப்போம் என்பதாகும்.

02 ▶

## சசிகலாவின் வீட்டின் மீது கல்வீச்சுத் தாக்குதல்!

(எஸ்.நிதர்ஷன்)

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வேட்பாளர் சசிகலா ரவிராஜின் வீட்டின் மீது கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

யாழ். தென்மராட்சி, சாவகச்சேரியில் அமைந்துள்ள



சசிகலாவின் வீட்டின் மீதே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி தாக்குதலில் வீட்டின் ஜன்னல் கண்ணாடிகள் சேதமடைந்துள்ளன.

சம்பவம் தொடர்பில் சசிகலா, சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

02 ▶

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**எல்பிட்டிய...**

சனிக்கிழமை பிற்பகல் 4 மணியுடன் நிறைவடைந்தன.

தற்போது வாக்கெண்ணும் பணிகள் இடம்பெறுகின்றன என்று காலி மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி டபிள்யூ.ஏ. தர்மசிறி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,




"எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலுக்கான வாக்கெடுப்பு நடவடிக்கைகள் இன்று சனிக்கிழமை காலை 7 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை நடைபெற்றது.

வாக்கெடுப்பு நடவடிக்கைகள் மிகவும் அமைதியான முறையில் நிறைவடைந்தன.

தற்போது, வாக்கெண்ணும் பணிகள் இடம்பெறுகின்றன." – என்றார்.

---

**சசிகலாவின்...**

சசிகலாவின் வீட்டிக்கு அயல் வீட்டில் உள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஆதரவாளரான பெண் ஒருவரினாலாயே இந்தக் கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும், அந்தப் பெண்ணினால் தான் தொடர்ச்சியாக அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருகின்றார்



எனவும் வேட்பாளர் சசிகலா சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் செய்துள்ள முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

---

**தமிழரசும்...**

ஜனாதிபதி அநுரகுமாரவின் இந்த யோசனையை நாம் வரவேற்கின்றோம். அநுர ஆட்சிக்கு வந்த இந்த ஒரே மாதத்திற்கு உள்ளேயே நாட்டின் அனைத்து சவால்களுக்கும் பதில் தரவேண்டும் என்ற குறுகிய அரசியலையும் நாம் செய்யவில்லை. புதிய அரசுக்கு நியாயமான அவகாசம் கொடுக்க பட வேண்டும் என நாம் எண்ணுகின்றோம்.

அதேவேளை, புதிய நாடாளுமன்றத்தில், இந்த உத்தேச புதிய அரசமைப்பை உருவாக்கும் சர்வகட்சி கலந்துரையாடலின்போது, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு வெற்று காசோலை தரவும் நாம் தயார் இல்லை.

புதிய பத்தாவது நாடாளுமன்றத்தில் இடம்பெற்று உத்தேச தேசிய கலந்துரையாடலில் பங்கேற்று, நமது மக்களின் நியாயமான அபிலாஷைகளை புதிய அரசமைப்பில் இடம்பெறச் செய்ய வேண்டும். இந்நோக்கில், தென்னிலங்கையில் தமிழ் முற்போக்குக் கூட்டணியும், வடக்கு, கிழக்கில் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் வெற்றி பெற்று அரசியல் பலத்துடன் நாடாளுமன்றத்தில் இடம்பெறுவது காலத்தின் கட்டாயம். இதைத் தமிழ் மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

நல்லாட்சியின்போது (2015–2018) நடந்த நல்ல பல விடயங்களில் ஒன்று, நாட்டின் அனைத்து பிரச்சினைகளுக்கும் சமபல தீர்வுகளைத் தேடும் புதிய அரசமைப்பு ஒன்றைக் கலந்துரையாடி உருவாக்கும் பணியாகும். அது ஒரு சர்வ கட்சிப் பணி.

2015 ஆம் ஆண்டு, சபாநாயகர் நாடாளுமன்றத்தில் பெயர் குறிப்பிட்டு நியமித்த வழிகாட்டல் குழு, புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கும் நோக்கில், கலந்துரையாடி, வாத விவாதம் செய்து, குறைந்தபட்ச பொது உடன்பாடுகளில் கருத்தொற்றுமை கண்டு முன்னெடுத்தது. இடைக்கால அறிக்கையையும் சமர்ப்பித்தது. இன்னும் பல துறைசார் உப குழுக்களையும் தனக்கு உதவியாக நியமித்தது.

அந்த வழிகாட்டல் குழுவில் இலங்கையின் தேசிய இனங்களையும், அரசியல் சித்தாந்தங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் சர்வ கட்சி பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டனர்.

வழிகாட்டல் குழுவுக்கு அன்றைய பிரதமர் ரணில் தலைமை தாங்கினார். ஜே.வி.பி. சார்பில் இன்றைய ஜனாதிபதி அநுர, தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் நான் (மனோ கணேசன்), தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் மறைந்த இரா.சம்பந்தன், எம்.ஏ.சுமந்திரன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ரவூப் ஹக்கீம், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் ரிஷாத் பதியுதீன் மற்றும் தினேஷ் குணவர்தன, பிரசன்ன ரணதுங்க, சம்பிக்க ரணவக்க, டிலான் பெரேரா, ஜயம்பதி விக்கிரமரத்ன ஆகியோர் உட்பட இன்னும் பலர் இக்குழுவில் இடம்பெற்றனர்.

சிங்கள, ஈழத்தமிழ், முஸ்லிம், மலையக இலங்கை மக்கள் சார்பாக விரிவான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கபட்டு, கலந்துரையாடி மிகச் சிறப்பாக நடந்த இந்தப் பணியை, அதன் இடைகால அறிக்கை வந்ததும், திட்டமிட்டு அரசியல் நோக்கில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனை குழப்பியது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனை சார்பில் அன்று வழிகாட்டல் குழுவில் இடம்பெற்றவர்கள், கடந்த மாதம் வரை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியிலே பிரதமராக இருந்த தினேஷ் குணவர்தன மற்றும் பிரபல அமைச்சராக இருந்த பிரசன்ன ரணதுங்க ஆகியோராகும்.

வழிகாட்டல் குழுவின் செயற்பாட்டைக் குழப்ப, இந்த இனவாத ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனை கும்பல் பயன்படுத்திய கோஷம் "பிரபாகரன் ஆயுத பலத்தால் பெற முடியாததை, சம்பந்தன் பேச்சு வார்த்தையால் பெற முயல்கின்றார்" என்பதாகும். இந்தக் கும்பலுக்கு அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால, இரகசிய ஆதரவு வழங்கி, 52 நாள் திருட்டு அரசில் மஹிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமித்தது வரை அந்த அலங்கோல வரலாறு தொடர்ந்தது. அத்துடன் அந்தப் புதிய அரசமைப்பை எழுதும் "வழிகாட்டல் குழு" செயன்முறை இடை நின்றது.



இன்று, இனவாதிகள் அரசியல் பரப்பில் கணிசமாக இல்லை. ஆகவே, நாம் அனைவரும் அன்று ஆரம்பித்த, புதிய அரசமைப்பை எழுதும் சர்வ கட்சிப் பணியைத் தொடரப் போவதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அறிவித்துள்ளதை நாம் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம்.

மாறிவரும் இன்றைய அரசியல் சூழலில், நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கப் போகும், அரசியல் யாப்பை உருவாக்கும் உரையாடலில் ஆளுமையும், அனுபவமும் உள்ள சிறுபான்மை மக்கள் பிரதிநிதிகள் பங்கு பெற வேண்டுமா? இல்லையா? என்பதைத் தமிழ் வாக்காளர்கள் தீர்மானிக்க வேண்டும்.

இந்த நோக்கில், கொழும்பு, கம்பஹா, இரத்தினபுரி, கேகாலை, கண்டி, நுவரெலியா, பதுளை மாவட்டங்களில் போட்டியிடும் தமிழ் முற்போக்குக் கூட்டணியும், யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில்



போட்டியிடும் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் வெற்றி பெற்று அரசியல் பலத்துடன் நாடாளுமன்றத்தில் இடம்பெறுவது காலத்தின் கட்டாயம். இதைத் தமிழ் மக்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்." – என்றுள்ளது.


பாராளுமன்ற தேர்தல் 2024
யாழ் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்
சிறீதரன்
சுமந்திரன்
சுகிர்தன்
சயந்தன்
கிருஸ்ணவேணி
பிரகாஷ்
ஆர்னோல்ட்
சுரேகா
இளங்கோவன்
அடையாளம் மாறாத
அரசியல் மாற்றம்
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
Ilankai Tamil Arasu Kadchi



# தமிழ் மக்கள் கூட்டணியினர் இன்று யாழ். நகரில் பிரசாரம்

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ் மக்கள் கூட்டணியினரின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் இன்று யாழ். நகரில் முன்னெடுக்கப்பட்டது.

நகரப் பகுதியில் தேர்தல் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு பொதுமக்களிடம் ஆதரவு கோரப்பட்டது.

இதன்போது தமிழ் மக்கள் கூட்டணியின் யாழ். தேர்தல் மாவட்ட முதன்மை வேட்பாளர் வி.மணிவண்ணன், வரதராஜன் பார்த்தீபன், மிதிலைச்செல்வி பத்மநாதன் உள்ளிட்ட வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் யாழ். மாநகர முன்னாள் மேயர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையில் தமிழ் மக்கள் கூட்டணி மான் சின்னத்தில் போட்டியிடுகின்றது.









## மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் மரணம்:

# வீட்டின் உரிமையாளரை கைது செய்ய உத்தரவு

(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டானில் மின்சாரம் தாக்கிக் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்த சம்பவத்தில் வீட்டின் உரிமையாளரை உடன் கைது செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

ஒட்டுசுட்டானில் வீடொன்றுக்கு முன்பாகத் தேர்தல் சுவரொட்டி ஒட்டிய சமயம் மின்சாரம் தாக்கி மரணமடைந்த சம்பவம் தொடர்பிலேயே வீட்டின் உரிமையாளரைக் கைது செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.



ஒட்டுசுட்டான், முத்து விநாயகபுரம் பகுதியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் போட்டியிடும் இரண்டு வேட்பாளர்களின் விளம்பர சுவரொட்டிகளைக் குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு ஒட்டியபோது வீட்டின் முன்பாக அமைத்திருந்த யானை வேலியின் மின்சாரம் தாக்கியுள்ளது.

மின்சாரத் தாக்குதலுக்கு இலக்கான குடும்பஸ்தர் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதும் உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பில் ஆராய சம்பவ இடத்துக்குச் சென்ற முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் வீதியோரம் அமைக்கப்பட்டிருந்த யானை வேலியைப் பார்வையிட்ட பின்னர் வீட்டின் உரிமையாளரைக் கைது செய்து வழக்குப் பதிவு செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார்.

### யாழ்ப்பாணம் பல்கலைக்கழக

# மாணவர் ஒன்றியத்தின் செயலாளராக யாப்புக்கு மாறாகப் புதியவர் நியமனம்

## எதிர்ப்புகளையடுத்து பல்கலைக்கழக மட்டத்தில் விசாரணை ஆரம்பம்

(பிரபாகரன் டிலக்சன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் பதவிக்குச் சட்டவிரோதமான முறையில் புதிதாகப் பதவியேற்றவருக்குப் பலத்த எதிர்ப்புகள் கிளம்பியுள்ளதோடு பல்கலைக்கழக மட்டத்தில் விசாரணைகளும் ஆரம்பமாகியுள்ளன.




யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயலாளராக இதுவரை காலமும் பதவி வகித்தவர் தனது கற்கைகளை முடித்து வெளியேறிய நிலையில் அவருடைய பதவிக்கு முன்னைய ஒன்றியத்தின் நிர்வாகக் குழுவில் அங்கம் வகித்த ஒருவர் யாப்பு விதிகளுக்கு முரணாகப் புதிதாகப் பதவியேற்றுள்ளார். இதனால் புதிய கலைப்பீட மாணவர் ஒன்றியத்துக்கான பிரதிநிதித்துவம் தடுக்கப்பட்டுள்ளது. இதற்கு எதிராகக் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினர் மற்றும் விரிவுரையாளர்கள் எதிர்ப்புகளை வெளியிட்டுள்ளனர்.

சட்டவிரோதமான பதவியேற்பு தொடர்பான விசாரணைகளை உடன் மேற்கொள்ளுமாறு கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினரால் கோரிக்கைக் கடிதம் ஒன்றும் நேற்று வெள்ளிக்கிழமை துணைவேந்தரிடமும், மாணவர் நலச்சேவை அலுவலகத்திடமும் கையளிக்கப்பட்டுள்ளது.

கலைப்பீட மாணவர் ஒன்றியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பிரதான மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் பதவி வகிக்கும் நிலையில் முன்னைய ஒன்றியத்தின் காலம் நிறைவடைந்த நிலையில் வறிதாக்கப்பட்ட செயலாளர் பதவிக்குக் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தில் அங்கம் வகிக்காத ஒருவர் புதிதாகப் பிரதான மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் பதவியைக் கைப்பற்றியமை யாப்பு விதிமுறைகளுக்குச் சட்டவிரோதமானது என்று யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்க வட்டாரங்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளன.

மாணவர் ஒன்றியத்தின் செயற்பாடுகளை வலுவிழக்கச் செய்யும் வகையிலும், யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துக்குச் சமூக மட்டத்தில் இருக்கும் நன்மதிப்பைக் கெடுக்கும் வகையிலும் புதிதாக சட்டவிரோதமாகச் செயலாளர் பதவி கைப்பற்றப்பட்டுள்ளதா என்ற சந்தேகத்தை மாணவர்கள் வெளியிட்டுள்ளனர்.

# மன்னார் மாவட்டத்தில் மழையால் ஆயிரத்து 898 குடும்பங்கள் பாதிப்பு




(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை (24) காலை வரை பெய்து வந்த கடும் மழையால் 1898 குடும்பங்களைச் சேர்ந்த 7023 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை மன்னார் மற்றும் நானாட்டான் பிரதேச செயலக பிரிவுகளில் சில இடங்கள் வெள்ளத்தில் மூழ்கி உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் மூன்று இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மன்னார் செல்வநகர் ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய பொது மண்டபத்தில் 16 குடும்பங்களைச் சார்ந்த 53 நபர்களும், எமில் நகர் பகுதியில் அன்னை தெரேசா பாடசாலையில் 43 குடும்பங்களைச் சார்ந்த 158 நபர்களும், ஓலைத்தொடுவாய் பகுதியில் 03 குடும்பங்களைச் சேர்ந்த 11 நபர்கள் இடம்பெயர்ந்து பொது இடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் பிரதேச செயலர் பிரிவில் மன்னாரில் பெய்த கனமழை காரணமாக மொத்தமாக 1608 குடும்பங்கள் சார்ந்த 5883 நபர்கள் கடும் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவில் 290 குடும்பங்களைச் சார்ந்த 1390 நபர்கள் பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

பாதிப்படைந்த மக்களுக்கு மன்னார் மாவட்ட செயலகம், அனர்த்த முகாமைத்துவ பிரிவு, பிரதேச செயலகங்கள் மற்றும் கிராம அலுவலர்கள் ஊடாக நிவாரணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## காலத்தின் கட்டாயம்

நடைபெற உள்ள பொதுத் தேர்தல் தொடர்பில் தமிழர்களின் நிலைப்பாடுகளை ஒட்டி ஒரு முக்கிய விடயத்தை தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் சுட்டிக் காட்டி இருக்கிறார்.

இந்தத் தேர்தலில் தென்னிலங்கையில் தமிழ் முற்போக்குக் கூட்டணியும், வடக்கு - கிழக்கில் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் வெற்றி பெற்று தகுந்த அரசியல் பலத்துடன் நாடாளுமன்றத்தில் இடம் பெறுவது காலத்தின் கட்டாயம். இதனை தமிழ் மக்கள் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்று சுட்டிக்காட்டி இருக்கிறார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன்.

அதற்கான காரணங்களையும் அவர் தெளிவாகத் தமிழ் மக்கள் முன் வைத்திருக்கின்றார். அவை ஊன்றிக் கவனிக்கப்பட வேண்டும்.

இந்த நாட்டின் தேசிய இனப் பிரச்சினை என்ற தீராச் சவாலுக்கு - தலை வலிக்கு - தீர்வாக புதிய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க பிரேரித்திருக்கும் திட்டத்தை மனோ கணேசன் சுட்டிக் காட்டுகிறார்.

2015 முதல் 2018 வரை நல்லாட்சி அரசின் கீழ் எல்லோரும் ஒன்றிணைந்து முன்னெடுத்த புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கும் நோக்கிலான சர்வ கட்சி கலந்துரையாடலை தொடர்ந்து முன்னெடுப்போம் என்பது புதிய ஜனாதிபதியின் திட்டமாக இருப்பதை மனோ கணேசன் சுட்டுகின்றார்.

அந்த விடயத்தை முன்னெடுப்பதற்கு நாடாளுமன்றத்தில் இந்த விவகாரத்தில் சம்பந்தப்பட்ட தமிழ் முற்போக்குக் கூட்டணியும் இலங்கை தமிழரசு கட்சியும் வலுவான பலத்துடன் நாடாளுமன்றத்தில் இம்முறை இருப்பது மிக முக்கியம் என்பது அவரது வாதம். அது சரியானதே.

இன்று இனவாதிகள் அரசியல் பரப்பில் கணிசமாக இல்லை. ஆகவே எல்லோரும் சேர்ந்து ஆரம்பித்த அந்த புதிய அரசமைப்பை எழுதும் சர்வ கட்சி பணியைத் தொடர்வதற்கு ஜனாதிபதி எடுத்துள்ள தீர்மானம் மகிழ்ச்சியுடன் வரவேற்கத்தக்கது என மனோ கணேசன் சுட்டிக்காட்டு வதில் அர்த்தமுள்ளது.

நல்லாட்சி அரசின் போதும் அந்த அரசமைப்பு உருவாக்கம் முயற்சியில் வடக்கு, கிழக்கு தமிழர் தரப்பில் தமிழரசுக் கட்சி உட்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈடுபட்டது என்பது உண்மைதான். ஆனால் அந்த முயற்சியில் கூட்டமைப்பின் பிற பங்காளி கட்சிகள் முழு இதயசுத்தியுடன் பங்குபற்றின என்று கூறுவதற்கு இடமில்லை.

அப்போது தமிழ் கூட்டமைப்பிலிருந்த 14 நாடாளுமன்ற உறுப்பினர்களில் இரா. சம்பந்தனையும் சுமந்திரனையும் தவிர வேறு எவருமே அந்த முயற்சியை முழு மனதோடு வரவேற்று அதற்கு ஆதரவாக செயல்படவில்லை.

அப்போதைய கூட்டமைப்பின் பங்காளியான புளொட் கட்சியின் தலைவர் சித்தார்த்தன், மேற்படி புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிக்கான வழிகாட்டல் குழுவின் உபகுழு ஒன்றின் தலைவராக இருந்து அந்த உபகுழு அறிக்கையை சமர்ப்பித்தார். ஆயினும் அந்த புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சியை சாதகமாக வரவேற்று அதற்காக குரல் எழுப்பியவர் அல்லர் அவர். அந்த முயற்சி வெற்றி அளிக்காது என்று பகிரங்கமாக வெளியில் கருத்துக் கூறி, அந்த முயற்சியை பின்னடைய செய்யும் விதத்தில்தான் அவரும் நடந்து கொண்டார். ஆக கூட்டமைப்பில் தமிழரசு கட்சி உறுப்பினர்கள் இருவர் மட்டுமே அந்த முயற்சியை முழுமூச்சாக - கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் - முன்னெடுத்தனர்.

இன்று அதே முயற்சியை தொடர்ந்து முன்னெடுத்து தீர்வு ஒன்றைக் காண்பதனால் அதே தமிழரசு கட்சி பலத்தோடு நாடாளுமன்றத்தில் இருப்பது முக்கியமாகும். அதனைத்தான் மனோ கணேசன் சுட்டிக் காட்டுகின்றார்.

மாறிவரும் இன்றைய அரசியல் சூழலில் நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்க போகும் அரசியல் யாப்பை உருவாக்கும் உரையாடலில் ஆளுமையும் அனுபவமும் அதே நேரத்தில் அந்த விடயத்தை முன்னெடுத்த உரித்தும் கொண்ட தரப்புகள் மக்கள் பிரதிநிதிகளாக பங்கு பெறுவது அவசியம் என்று மனோ கணேசன் தெரிவிக்கும் விடயத்தின் அர்த்த பரிமாணத்தைத் தமிழ் மக்கள் சரியாகப் புரிந்து கொண்டு செயல்பட வேண்டும்.

அவர் குறிப்பிடுவது போல தென்னிலங்கையில் தமிழ் முற்போக்குக் கூட்டணியும் வடக்குக் கிழக்கில் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் அதிக வெற்றுயீட்டி அரசியல் பலத்துடன் நாடாளுமன்றத்தில் இடம்பெறுவது காலத்தின் கட்டாயம். இதைத் தமிழ் மக்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET

Gunams super market super deal

24, 25, 26/10/2024

100 $ மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு 4lb மைசூர் பருப்பு இலவசம்

Open until 10:00 PM.




more details CLICK

1145 Morningside Ave, Toronto, ON M1B 0A7
Contact : 416 283 9998

# கடல் பயணங்களில் ஈடுபடும் மீனவர்கள் முதலுதவியை அறிந்திருக்க வேண்டும்!

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜென்சன் றொனால்ட்

(த.சுபேசன்)

கடல் பயணங்களில் ஈடுபடும் மீனவர்கள் கட்டாயம் முதலுதவி பற்றி அறிந்திருக்க வேண்டும் என்று மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நாச்சிக்குடா கிராமத்தில் இடம்பெற்ற கடற்றொழிலாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வில் வளவாளராக கலந்து கொண்ட போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

மீனவர்களின் வாழ்க்கை தினந்தினம் கடலோடு போராடுவது. அங்கு ஏற்படக் கூடிய உயிராபத்துக்களைத் தடுக்க கடல் பயணங்களில் ஈடுபடும் மீனவர்கள் கட்டாயம் முதலுதவி பற்றி அறிந்திருக்க வேண்டும்.

முலுதவியை உணர்ச்சி வசப்பட்ட நிலையிலோ- உரிய அறிவின்றியோ செய்ய முற்பட்டால் பாதிக்கப்பட்டவரின் பாதிப்பு தீவிரமடைந்து உயிரிழப்புக் கூட ஏற்படலாம்.

முதலுதவி பற்றிய பூரண பயிற்சி மற்றும் அறிவுடன் அருகிலுள்ள வளங்களை பொருத்தமான விதத்தில் பயன்படுத்தி பாதிப்பின் தன்மையைக் குறைக்கும் விதமாக விரைவாக வைத்தியசாலைக்கு அவரைக் கொண்டு செல்



வதற்கிடையில் மேற்கொள்ளப்படும் உதவியே முதலுதவியாகும். இதனால் பாதிக்கப்பட்டவரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதில் தாமதம் ஏற்படக்கூடாது. இது ஒரு சிகிச்சை அல்ல.

கடலுக்குச் செல்லும் போது படகில் போதிய எண்ணை, சுத்தமான போதிய குடிதண்ணீர், உணவு என்பவற்றுடன் உயிர்காப்புக் கவசத்தையும் அணிந்து செல்ல வேண்டும். கடலில் காற்றின் வேகம்- அலையின் உயரம் என்பன ஆபத்தானவையாக எந்த வேளையிலும் மாறலாம். நீச்சல் நன்கு தெரிந்து வைத்திருப்பது மிகவும் சிறந்தது.

வலிப்பு, இதய மற்றும் இழுப்பு நோயுடையவர்கள் அவதானமாக இருப்பதோடு தமக்கான மருந்துகளையும் எடுத்து செல்ல வேண்டும்.

மேலும் ஆபத்து வேளைகளில் நீரில் மூழ்கியவரைக் காப்பாற்ற கயிறு, பலமான தடி, மிதவைகள் என்பவற்றைப் பயன்படுத்த ஆயத்தமாக வைத்திருப்பதோடு, சமிக்ஞைகளை வழங்க மின்சூழ், சிவப்புக்கொடி, புகையை வெளிவிடக் கூடிய உபகரணங்கள், முதலுதவிப் பெட்டி, திசைகாட்டி மற்றும் செல்லிடத் தொலைபேசிகளையும் எடுத்துச் செல்லவேண்டும்.

நீரில் மூழ்கியவருக்கு சுவாசவழி அடைப்பை நீக்கி மீளுயிர்ப்பு நிலையில் வைத்திருக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

மேலும் உடலில் ஒவ்வாமையை ஏற்படுத்தக் கூடிய இழுது மீன், நச்சுநீர் குறித்து எச்சரிக்கையோடு செயற்படுவதோடு பாதிப்பு தீவிரமடைய முன்பே வைத்திய சாலையை நாடவேண்டும்.- என்றார்.

இந்த விழிப்புணர்வு நிகழ்வின் போது நீரில் மூழ்குதல், காயங்களுக்குக் கட்டுப்போடுதல், என்பு முறிவுகளைக் கையாளுதல், நஞ்சூட்டலின் போது எவ்வாறு செயற்படுதல், பாம்புக்கடி, நாய்கடி மற்றும் விபத்துக்களின்போது முதலுதவி செய்வது பற்றியும் விளக்கமளிக்கப்பட்டது.

அத்துடன் சுவாசம் மற்றும் இயத்துடிப்பை மதிப்பிடுதல், செயற்கைச் சுவாசமளித்தல், மீளுயிர்ப்பு நிலையில் ஒருவரைப் பேணுல் என்பன செய்முறை ரீதியிலும் கபயிற்சியளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# வேட்பாளர்களை ஆதரித்துக் கூட்டம்

(எம். எப். றிபாஸ்)

திகாமடுல்ல மாவட்டத்தில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து மக்கள் சந்திப்பும் பொதுக் கூட்டமும் நாற்பிட்டிமுனையில் நேற்று (25) இடம்பெற்றது.

சட்டத்தரணி சீ.எம். கலீம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கட்சியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான றிஷாட் பதியூத்தின் பிரதம அதிதியாகவும், மாவட்டத்தில் அக்கட்சியில் போட்டியிடும் வேட்பாளர்கள் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.





# உலக வங்கியின் பிரதிநிதிகள் கிழக்கு ஆளுநருடன் சந்திப்பு!

(எஸ்.கீதபொன்கலன்)

உலக வங்கியின் பிரதிநிதிகள் குழுவுக்கும் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜெயந்தலால் ரத்னசேகரவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்திம் வியாழக்கிழமை (24) திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்நாயக்க, கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் திரு.எல்.பி.மதநாயக்க, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு.எச்.இ.எம்.டபிள்யூ. ஜி.திஸாநாயக்க மற்றும் கல்வித்துறை அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் உலக வங்கியின் உதவியுடன் கிழக்கு மாகாணத்தில் கல்வித்துறையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் அதன் முன்னேற்றம் மற்றும் நன்மைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

# திருகோணமலை மாவட்டத்தை தேசிய மக்கள் சக்தி வெல்லும்!

## தேசிய மக்கள் சக்தி வேட்பாளர் முஹம்மது ராபிக்

(ஹஸ்பர்)

இந்த முறை நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி அமோக வெற்றியை காணும் என்று திருகோணமலை மாவட்ட தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற வேட்பாளர் முஹம்மது ராபிக் தெரிவித்தார்.

திருகோணமலை வெள்ளைமணல் பகுதியில் இன்று (26) இடம் பெற்ற மீனவர்களுடனான கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

இப் பகுதி மக்கள் காணிப் பிரச்சினை கடல் தொழில் பிரச்சினை எனப் பல கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளனர். இதற்காக காணிக்கான தனியான ஆணைக்குழு அமைத்து தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் தீர்வு வழங்கப்படும்.



மக்கள் தேசிய மக்கள் சக்தியை நம்பி ஜனாதிபதிக்கான ஆணையை வழங்கியுள்ளார்கள். அது போன்று இம் முறை நாடாளுமன்றத்திலும் ஆட்சி அமைக்கக் கூடிய பலத்தை மக்கள் நிச்சயமாக வழங்குவார்கள்.

அரசியலில் ஜாம்பவான்கள் என கூறிய பலர் சுமாராக 96 முன்னால் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் இந்த தேர்தலில் போட்டியிடாது விலகியுள்ளார்கள். இவர்கள் தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் அரசியல் வியாபாரம் செய்யவோ, திருடவோ முடியாது என்ற எண்ணத்தில் விலகியுள்ளார்கள்.

இது புதிய நாடாளுமன்றத்தின் பலத்தை எமக்கு காட்ட உதவும். கடந்த காலத்தில் ஊழல் செய்தவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.- என்றார்.

# கல்முனை தமிழ் மக்களின் இருப்பை கேள்விக் குறியாக்க இடமளியோம்!

## தமிழரசுக்கட்சி வேட்பாளர் நிதான்சன்

(பாறுக் ஷிஹான்)

கல்முனையை துண்டாட நினைத்து தமிழ் மக்களின் இருப்பை கேள்விக் குறியாக்க முயற்சிக்கும் எந்தவொரு அரசியல் சக்திக்கும் எமது கட்சி தலைமையும் எமது கட்சி உறுப்பினர் களும் இடமளிக்க மாட்டார்கள்.

இவ்வாறு அம்பாறை மாவட்டம் திகாமடுல்ல தேர்தலில் தொகுதியில் தமிழரசுக் கட்சி சார்பாக வீட்டுச் சின்னம் இலக்கம் 1 இல் போட்டியிடும் வேட்பாள ரும் இலங்கைத் தமிரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி துணைச் செயலா ளருமான அருள்ஞானமூர்த்தி நிதான் சன் தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் இன்று (26) நடைபெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

இந்த தேர்தல் காலங்களில் கல் முனை வடக்கு பிரதேச செயலகத்தை முன் வைத்து அரசியல் செய்பவர் களுக்கு எதிராக குரல் கொடுக்க வேண டிய தேவை எனக்கு இருக்கின்றது.

வடக்கு பிரதேச செயலகம் தொடர்பாக வழக்கு ஒன்று நிலுவையில் இருக் கின்றது. இதனை எந்தவொரு சக்தி யாலும் முறியடிக்க முடியாது. இந்த வழக்கில் நாங்கள் வெற்றி பெறும் நிலைப்பாட்டில் இருக்கின்றோம். ஆனால் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸின் கூட்டம் ஒன்றில் தமிழ் மக்களுக்கு எதிரான தீவிரமான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அந்தக் கருத்துக்கள் யாவும் ஆக்ரோஷ மானதாகவும் தமிழ் முஸ்லீம் மக்களின் இனவாதத்தை தூண்டுவனவாகவும் அமைந்துள்ளன.

அத்துடன் இவ்வாறான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்ற வேளை நேரலைகள் வலுக்கட்டாயமாக நிறுத்தப்பட்டதோடு ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக செய்திகளை சேகரிப்பதற்கு தடுக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இதனால் அன்று அவரால் பேசப்பட்ட விடயங்கள் வெளியாகாத நிலையில் அங்கிருந்து தகவல்களை பெற்றி



ருந்தோம். அந்த வகையில் தமிழ் மக்களை ஒரு பயங்கரவாதிகளாகவும் வடக்கு பிரதேச செயலகத்தை பயங்கர வாதிகள் கொண்டு வந்த பிரதேச செய லகமாகவும் கூறி சந்தர்ப்பவாத அரசி யலையும் அவரது அனுதாப அரசி யலையும் மிக கேவலமாக செயற்படுத்த முயற்சி செய்கின்றார்.

இதற்காக முஸ்லீம் மக்களை உணர்வு ரீதியாக தூண்டி விட வேண்டும் என்பதற்காகவும் அவர் தனது சார்பில் அனுதாப அலையை அதிகரிப்பதற்கா கவும் ஊடகங்களின் சுதந்திரத்தை மறுத்தது மாத்திரமன்றி பல இனவாதக் கருத்துக்களை விதைத்துள்ளார் என்பது எமக்கு அறியக்கிடைத்துள்ளது.

நாங்கள் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகின்றோம். அவர் இன்று ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிர ஸில் இருந்து கொண்டு தற்போது அதில் இருந்து விலகியது போன்று நாடகம் ஒன்றை ஆடிக்கொண்டு இருக்கின்றார். கடந்த காலங்களில் தனது தலையை ரணிலுக்கு காட்டிவிட்டு வாலை சஜித் துக்குக் காட்டி இன்று ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவுக்குத் தனது ஆதரவாளர்களை வேலை செய்ய வைத்துக்கொண்டு அவர்களுக்கான ஆதரவை வழங்கி வருகின்றார்.இது உண்மையான விடயமாகும்.அதுமாத் திரமன்றி கல்முனை பகுதியை பகை மையாக காட்டிக்கொண்டு தனக்கு ஆசனம் வழங்கப்படவில்லை என ஹரிஸ் கூறி இருக்கின்ற போதிலும் இன்று அவரை விட இனவாதியான சக்திகள் உருவாகிக்கொண்டு இருக் கின்றது.

கல்முனை பகுதியில் உள்ள ஒரு பொது நூலகத்துக்கு முன்னாள் அமைச்சர் ஏ.ஆர்.எம். மன்சூர் என்ப வரது பெயரை சூட்டுவதற்காக முயற்சி எடுத்த தரப்புக்கள் தேர்தல் களத்தில் குதித்திருக்கின்றது.ஏ.ஆர்.எம். மன்சூர் என்பவரது மகன் ரஹ்மத் மன்சூர் அவர்கள் இன்று தேர்தல் களத்தில் இறங்கியுள்ளார்.அவர் தமிழ் மக்க ளுக்கு எதிரான செயற்பாடுகளை தீவிர மாக முன்னெடுத்த கல்முனை மாநகர சபையின் ஒரு பிரதி மேயராக இருந் திருக்கின்றார்.

இவர் கல்முனை மாநகர சபைக் குட்பட்ட பொது நூலகத்திற்கு தனது தந்தையாரின் பெயரை வைக்க வேண் டும் என கூறிய மிக தீவிரமான நபராக இருந்திருக்கின்றார்.

தமிழ் மக்களின் இருப்பை கேள்விக் குறியாக்க முயற்சிக்கின்ற எந்தவொரு அரசியல் சக்திக்கும் எமது கட்சி தலை மையும் எமது கட்சி உறுப்பினர்களும் இடமளிக்க மாட்டார்கள்.

அத்தோடு நான் இந்த இடத்தில் நாடாளுன்ற உறுப்பினராகவோ அல்லது கட்சியின் சாதாரண உறுப்பி னராகவோ இருந்தாலும் கூட இவ் வாறான இனவாத நடவடிக்கைக்கு இடங்கொடுக்க மாட்டேன்.

அது மாத்திரமன்றி சிறு சிறு குழுக்களின் கலந்துரையாடல்களின் படி தமிழ் மக்களுக்கு எதிரான தீவிர பிரச்சாரங்களில் பாசிசவாதம் என்ற சொற்கள் தமிழ் மக்களுக்கு எதிராக பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறான சொற் பிரயோகங்கள் தவிர்க்கப்பட வேண்டும்.

கரையோர மாவட்டம் என்பது ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் யாப்புக் கொள்கையாக இருப்பினும் கல்முனை தமிழர்களுக்கு அநீதி இழைக்கப்படும் வகையில் கல்முனை தொடக்கம் பொத்துவில் வரையான தமிழ் கிராமங்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கின்ற வகையில் கரையோர மாவட்டம் பிரிப்பதற்கு எந்தவொரு இடத்திலும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம்.

அதனை முன்னிறுத்திக் கல்முனை பகுதியில் தேர்தலில் இறங்கி இருக்கும் வேட்பாளர்களுக்கு எதிராக நான் களத்தில் எப்போதும் இருப்பேன். – என்றார்.

EVEREST
FURNITURE
MODERN FURNITURE
FOR YOUR HOME

(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ MIX 1C1 SCARBOROUGH, CANADA

# தமிழ் கட்சியில் தமிழ் பிரதிநிதித்தும் தமிழர்களது இருப்பை பாதுகாக்கும்!

## இலங்கை தமிழரசுக் கட்சி வேட்பாளர் குகதாசன்

(ஹஸ்பர்)

தமிழ் கட்சியில் இருந்து தமிழ் பிரதிநிதித்துவத்தை தெரிவு செய்தால் தான் மக்களின் உரிமைகளை பாதுகாக்க முடியும் என்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட முதன்மை வேட்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சண்முகம் குகதாசன் தெரிவித்தார்.

திருகோணமலை, திரியாய் பகுதியில் இன்று (26)இடம் பெற்ற தேர்தல் பரப்புரை கூட்டத்தின் போதே இவ்வாறு தெரிவித்தார்.



தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

தமிழ் கட்சி சார்பில் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதால்தான் மக்கள் பிரச்சினைகளை நாடாளுமன்றத்தில் பேச முடியும்.

ஜே.வி.பியில் தெரிவாகினால் அது நடக்காது. எனவே தான் மக்கள் இம்முறை இதனை கவனத்தில் கொண்டு பிரதிநிதித்துவத்தை பாதுகாக்க வேண்டும். திரியாய் பகுதியில் பல பிரச்சினைகள் உள்ளன. குச்சவெளி பிரதேச செயலக பகுதியில் பௌத்த விகாரைகளை அமைக்க மக்கள் காணிகளை அடாத்தாக கையகப்படுத்தியுள்ளனர்.

இது போன்று தொல்பொருள் திணைக்களம் வன இலாக திணைக்களம் துறை முக அதிகார சபை என பல மக்கள் விவசாய காணிகளை அபகரித்து எல்லையிட்டுள்ளனர்.

இதனை மீட்க தமிழ் பிரதிநிதித்துவம் இந்த மாவட்டத்துக்கும் மண்ணுக்கும் கட்டாயமாக தேவை. இதனால்தான் உங்களிடம் இங்கு வருகை தந்துள்ளோம். தமிழ் மக்களின் வாக்களிப்பு வீதம் குறைவாக காணப்படுகிறது. எனவே இம் முறை ஆர்வத்துடன் வாக்களித்து தமிழ் பிரதிநிதித்துவத்தை தமிழ் கட்சியில் இருந்து தெரிவாக ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்.– என்றார்.






# கிழக்கு ஆளுநரைச் சந்தித்தனர் சுவிஸ் தூதரகத்தின் அதிகாரிகள்

(எஸ்.கீதபொன்கலன்)

இலங்கைக்கான சுவிஸ் தூதரகத்தின் அரசியல் பிரிவு முதன்மைச் செயலாளர் திருமதி ஜஸ்டின் பொய்லட், கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜெயந்த லால் ரத்னசேகரவை நேற்று முன்தினம் வியாழக்கிழமை (24) திருகோணமலை ஆளுநர் அலுவலகத்தில் சந்தித்தார்.



சுவிஸ் முதன்மைச் செயலாளர் புதிய ஆளுநருக்கு வாழ்த்துத் தெரிவித்ததுடன், கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு சுவிஸ் அரசின் முழு ஆதரவையும்வழங்களதிர்பார்த்திருப்பதாகவும் கூறினார்.

சுவிஸ் அரசு மிகவும் நம்பிக்கையுடன் தற்போதைய அரசின் நிர்வாகத்தை பாராட்டுவதாகவும், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க கூறுவது போல், சிங்களவர், தமிழர் அல்லது முஸ்லிம் பிரஜை என்று கூறாமல் அனைவரும் இலங்கைப் பிரஜைகள் என கூறும் ஒரு நாட்டை உருவாக்கும் நோக்கத்துக்கு தமது மகிழ்ச்சியையும் தெரிவித்தார்.

சுவிட்சர்லாந்தின் முதன்மைச் செயலாளர் ஆளுநரிடம் எதிர்காலப் பணிகள் குறித்து வினவியபோது பதிலளித்த ஆளுநர்,

மத்திய அரசுடன் இணைந்து தேசிய திட்டத்தின் மூலம் எதிர்காலப் பணிகள் திட்டமிடப்பட்டுள்ளதால், கல்வி, சுகாதாரம், சுற்றுலாத் துறைக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றார்.

கிழக்கு மாகாணத்தில் கழிவு முகாமைத்துவத்துக்கு விசேட முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் கூறினார்.

சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என்ற பல்லினங்களைக் கொண்ட கிழக்கு மாகாணத்தில், மக்களின் தேவைகளைக் கேட்டறிந்து, கிழக்கு மாகாணத்தின் பிரச்சினைகளில் கவனம் செலுத்தி, குறுகிய கால மற்றும் நீண்ட காலத் தீர்வுகளைக் காணவும், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்காவின் நோக்கான அனைவரும் இலங்கைப் பிரஜையாக வாழும் நிலையை கிழக்கு மாகாணத்தில் உருவாக்கி, தேசிய ஐக்கியத்தை கட்டியெழுப்புவதற்காக தாம் செயற்பட்டு வருகிறார் என்றும் ஆளுநர் மேலும் கூறினார்.





# தமிழரசுக் கட்சியின் தேர்தல் அலுவலகம் முல்லைத்தீவின் நேற்றுத் திறந்து வைப்பு

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்காக முல்லைத்தீவு விசுவமடு பகுதியில் இலங்கை தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்டத்தில் போட்டியிடும் சட்டத்தரணி செல்வராஜ் டினேசனின் தேர்தல் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

நேற்று (25) இடம்பெற்ற இந்த நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

அத்துடன் அலுவலகம் திறந்த பின்னர் முல்லைத்தீவு மற்றும் விசுவமடு பகுதி கிராமங்களில் பிரச்சார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டபோது டினேசனுக்கு முல்லைத்தீவு மக்கள் தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர்.

# கடும் பாதுகாப்புக் கெடுபிடிக்கு மத்தியில் அம்பாறை மாவட்டம்

(பாறுக் ஷிஹான்)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான றிசாத் பதியுதீன், ரவூப் ஹக்கீம் மற்றும் அதாவுல்லாஹ் உள்ளிட்டோரின் வருகையை முன்னிட்டு அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் முப்படையினர் மற்றும் பொலிஸார் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

வெள்ளிக்கிழமை (25), சனிக்கிழமை (26) கள் அம்பாறை மாவட்டத்தின் பெரிய நீலாவணை, மருதமுனை, பாண்டிருப்பு, நற்பிட்டிமுனை, சேனைக் குடியிருப்பு, சவளக்கடை, நாவிதன் வெளி, சொறிக்கல்முனை ,வீரமுனை, சம்மாந்துறை, காரைதீவு, கல்முனை, சாய்ந்தமருது, நிந்தவூர், அட்டப்பளம், பாலமுனை, ஒலுவில், அட்டாளைச் சேனை, அக்கரைப்பற்று ,தம்பிலுவில், தம்பட்டை ,திருக்கோவில், பொத்துவில், உள்ளிட்ட பகுதிகளில் இவ்வாறு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

அம்பாறை மாவட்டம் பொத்துவில், அறுகம்பே பகுதியில் சுற்றுலா இடங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தப்படக் கூடும் என்று செய்திகள் வெளியாகிய நிலையிலும் இங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக கடும் பாதுகாப்பு கெடுபிடிக்கு மத்தியில் பொதுமக்கள் தமது அன்றாட நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.




முக்கிய சந்திகள், இதர வர்த்தக நிலையங்களில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் புலனாய்வாளர்கள் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

சந்தேகத்துக்கிடமாக இந்தப் பகுதிகளுக்கு வருகை தருவோர் துருவித் துருவி விசாரிக்கப்படுகின்றனர்.

தற்காலிக வீதி தடைகள், பரிசோதனையும் பாதுகாப்பு தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.





# கட்டுக்கரை விவசாயிகளின் சவால்கள் பற்றி ஆராய்வு!

(மன்னார்)

வன்னி தேர்தல் தொகுதியில் மன்னார் மாவட்டத்தில் நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் சம்சோன் ஜெறோம் நேற்று (25) கட்டுக்கரை குளத்தின் கீழ் விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்துள்ளார்.

மன்னார் அடம்பன் கன்னாட்டியில் விவசாயிகளுடன் சந்திப்பில் கட்டுக்கரை குளத்திற்கான நீர் வரத்தை எதிர்காலத்தில் அதிகரிக்க செய்வதன் ஊடாக வறட்சி காலத்தில் சிறுபோக நெற்செய்கை ஊக்கிவிக்கும் நோக்கில் குளத்தில் இருந்து விவசாயத்துக்கு எவ்வாறு நீர் வழங்கவேண்டும் என்பது தொடர்பில் வேட்பாளரால் எடுத்துரைக்கப் பட்டுள்ளது.

மன்னாரில் முதன்மையான குளமாக கட்டுக்கரை குளம் காணப்படுகிறது.

இந்தக் குளத்தை நம்பி பல ஆயிரம் விவசாயிகள் விவசாயச் செய்கையை மேற்கொண்டு வருகிறார்கள். குளத்துக்கான நீர் வரத்தை அதிகரிப்பதன் ஊடாக விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தலாம் என்று சுயேட்சைக்குழு வேட்பாளர் சம்சோன் ஜெறோம் எடுத்துரைத்தார். விவசாயிகளின் கருத்துக்களையும் கேட்டறிந்துள்ளார்.





# ஞானச்சுடர் 322 ஆவது ஆன்மீக மலர் வெளியீடு!

யாழ்ப்பாணம் வடமராட்சி தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான ஞானச்சுடர் 322 ஆவது ஆன்மீக மலர் வெளியீடு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில், நேற்று இடம்பெற்றது.

ஐப்பசி மாத ஞானச்சுடர் இதழான 322 ஆவது மலர் வெளியீட்டு நிகழ்வில், வெளியீட்டுரையை வில்லிசை மாமணி க.சத்தியதாஸ௱ம், மதிப்பீட்டுரையை ஆசிரிய ஆலோசகரும், சைவப் புலவருமான செ.கந்த சத்தியதாசனும் நிகழ்த்தினர். அதனைத் தொடர்ந்து சிறப்பு பிரதிக ளும் வழங்கப்பட்டன.

இதேவேளை, வடமராட்சி வடக்கு, வடமராட்சி தென் மேற்கு பிரதேச செயலகங்களின் முதியவர்களை கௌரவிப்பதற்கு 7 ஆயிரம் ரூபா பெறுமதியில் முதியவர்களுக்கான உடைகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை நிர்வாகிகள், உறுப்பினர்கள் சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள், அடியவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.







# கொட்டாஞ்சேனையில் டக்ளஸ௱க்கு வரவேற்பு அளித்துள்ளனர் மக்கள்!

முன்னாள் அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வு நேற்று (25) கொட்டாஞ்சேனையில் இடம்பெற்றது.

ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய ஆலயத்தில் ஆலய பிரதம குரு சுப்ரமணிய குருக்கள் தலைமையில் பூஜைகள் இடம்பெற்று மற்றும் சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா, தமிழ்நாடு நவக்களனிபுர சிவா குருக்கள், அம்பிகா ஜோதிடம், சிவனேசன் சர்மா, கொழும்பு கொச்சி கடை பொன்னம்பலாகேஸ்வர உதவி குரு ஈசன் சர்மா மற்றும் தர்சக சர்மா, யாழ். ரகுபதி சர்மா ஆகியோர் ஆசி வழங்கினர்.

ஆலய தர்மகத்தாக்களால் ஆலய அறங்காவலர் சபையால் பொன்னாடை போர்த்தி மாலை அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டதன் பின்னர் ஜிந்துப்பிட்டி ஆலயத்தில் இருந்து விவேகானந்தா சபை வரை மேளதாளங்களுடன்



டக்ளஸ்அழைத்துச் செல்லப்பட்டார்.

பின்னர் விவேகானந்தா சபையில் மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது.

நிகழ்வில் பலரால் டக்ளஸ் தேவானந்தாவுக்கு மலர்மாலை அணிவித்துக் கௌரவித்தனர்.




# கடந்த கால உறுப்பினர்கள் கட்சிக்கு துரோகம் செய்தனர்

## வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வில் ரிசாத்

(அபு அலா)

கடந்த காலங்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்கள் கட்சிக்கும் அதன் தலைமைக்கும் துரோகம் செய்துவிட்டுச் சென்றனர்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவர் ரிஷாத் பதியுத்தீன் இவ்வாறு தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் திகாமடுல்ல மாவட்ட வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வு நேற்று முன்தினம் (24) அட்டாளைச்சேனை ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் கலாச்சார மண்டபத்தில் இடம்பெற்றது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட மத்திய குழு தலைவரும், கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் அப்துல் ரசாக் ஜவாத் தலைமையில் இடம்பெற்ற இந்த வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வில், கட்சியின் தேசிய தலைவர் ரிஷாத் பதியுத்தீன் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கட்சியும் அதன் தலைமையும் கூறிய வாக்குறுதிகளை நம்பியே மக்கள் வாக்களித்து எம்பியாக்கினர். அவ்வாறு எம்பியானவர் கட்சியின் தலைவரை 8 வருடங்களுக்கு சிறையிலடைக்கச் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டு, கட்சியின் தலைமைப் பதவியை எடுப்பதற்கான பாரிய சதி முயற்சியைச் செய்தார். நான் எந்தத் தவறான செயற்பாடுகளிலும் ஈடுபடவில்லை.

இம்முறை திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் நிறுத்தப்பட்ட வேட்பாளர்கள் மார்க்கப் பற்றுள்ள, நல்ல ஆளுமையுள்ள, கட்சியின் கொள்கைக்கும் தலைமைக்கும் கட்டுப்பட்டு ஒரு விட்டுக்கொடுப்புடன் செயற்படுகின்றவர்களாகவே இருக்கின்றார்கள். என்றார்.

இந்த அறிமுக நிகழ்வில் பங்கேற்ற 10 வேட்பாளர்களும் தங்களின் பிரதேசங்களில் முன்னெடுத்த மற்றும் முன்னெடுத்துச் செல்லவுள்ள தேர்தல் செயற்பாடுகள் பற்றிய உரையுடன் அவர்களைப் பற்றியும் அறிமுகம் செய்தனர்.






# உதயநிதி தலைமையில் நடந்த நிகழ்ச்சியில் தவறாக பாடப்பட்ட தமிழ்த்தாய் வாழ்த்து

## பா.ஜ.க, பா.ம.க. தலைவர்கள் விமர்சனம்

தமிழக தலைமைச் செயலகத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்த்தாய் வாழ்த்து பிழையாக பாடப்பட்டிருப்பது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

தமிழக அரசின் புத்தாய்வு திட்ட பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நேற்று காலை நடைபெற்றது.

நிகழ்ச்சியின் தொடக்கத்தில், அங்கு இருந்த அரசு ஊழியர்கள் தமிழ்த்தாய் வாழ்த்து பாடினர். அப்போது, 'திகழ்பரதக் கண்டமிதில்' என்பதற்கு பதிலாக, 'கண்டமதில்' என்றும், 'புகழ்மணக்க' என்பதற்கு பதிலாக, 'திகழ்மணக்க' என்றும் அவர்கள் பிழையாக பாடினர்.

இதையடுத்து, பிழையின்றி பாடுமாறு அவர்களை துணை முதல்வர் உதயநிதி அறிவுறுத்தினார். மீண்டும் பாடிய போதும், அதேபோல பிழையாகவே பாடினர். இதனால், நிகழ்ச்சியில் சலசலப்பு ஏற்பட்டது.

பின்னர், செய்தியாளர்களை சந்தித்த உதயநிதி ஸ்டாலின்,

"தமிழ்த்தாய் வாழ்த்து தவறாக பாடப்படவில்லை. அவர்கள் பாடும்போது தொழில்நுட்ப கோளாறு காரணமாக, மைக் சரியாக வேலை செய்யவில்லை. இதனால், இரண்டு மூன்று இடங்களில் அவர்களது குரல் கேட்கவில்லை. எனவே, மீண்டும் சரியாக பாட வைத்தோம். நிறைவாக தேசிய கீதமும் பாடப்பட்டது. தமிழ்த்தாய் வாழ்த்து தொடர்பாக தேவையின்றி மீண்டும் பிரச்சினையை கிளப்பாதீர்கள்." என்று கூறினார்.

சென்னை டி.டி. தொலைக்காட்சியில் சமீபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆளுநர் ஆர்.என்.ரவி முன்னிலையில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடியவர்கள் 'திராவிடநல் திருநாடும்' என்ற வரியை பாடாமல் விட்டது கடும் விமர்சனத்துக்கு உள்ளானது.

'ஆளுநரை மத்திய அரசு உடனே திரும்ப பெற வேண்டும்' என்று முதல்வர் ஸ்டாலின் கடுமையாக விமர்சித்தார். துணை முதல்வர் உதயநிதி மற்றும் பல்வேறு தலைவர்களும் கண்டனம் தெரிவித்தனர். இந்த நிலையில், உதயநிதி பங்கேற்ற நிகழ்ச்சியில் அதேபோல நிகழ்ந்திருப்பது மீண்டும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதுகுறித்து அரசியல் கட்சி தலைவர்கள் விமர்சனம் வெளியிட்டுள்ளனர்.

மத்திய இணை அமைச்சர் எல். முருகன் கருத்து தெரிவிக்கையில்,

" தவறு நடந்தால் சுட்டிக்காட்டி திருத்தச் சொல்வதுதான் நல்ல தலைவருக்கு அழகு. ஆனால், டி.டி. தொலைக்காட்சி நிகழ்ச்சியில் தவறுதலாக தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டு, அதற்கு தொலைக்காட்சி சார்பில் மன்னிப்பு கேட்கப்பட்டும்கூட, அதை வைத்து முதல்வர் ஸ்டாலின், துணை முதல்வர் உதயநிதி ஆகியோர் அரசியல் செய்தனர். இப்போது துணை முதல்வர் உதயநிதி பங்கேற்ற நிகழ்ச்சியில் 2 முறை பாடியபோதும் தமிழ்த்தாய் வாழ்த்து தவறாகவே இருந்துள்ளது. இப்போது, முதல்வர் என்ன பதில் சொல்லப்போகிறார். துணை முதல்வர் உதயநிதி பதவி விலகுவாரா?" – என்றார்.

பா.ஜ.க. தேசிய மகளிர் அணி தலைவர் வானதி சீனிவாசன்,

"ஆளுநர் மீது இனவெறி சாயம் பூசிய முதல்வர், தற்போது உதயநிதி மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்?" என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழக பா.ஜ.க. ஒருங்கிணைப்பு குழு தலைவர் ஹெச்.ராஜா குறிப்பிடுகையில்,

"ஆளுநர் பங்கேற்ற நிகழ்ச்சியில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடலில் திராவிடம் என்ற வரி விடுபட்டபோது, ஆளுநரை வாபஸ் பெற வேண்டும் என்றார் முதல்வர் ஸ்டாலின். கடவுள் இருக்கிறார் என்பது ஒரே வாரத்தில் நிரூபணம் ஆகிவிட்டது. நீங்கள் எரிந்த பந்து அதே வேகத்தில் உங்களை வந்து தாக்கியுள்ளது. ஸ்டாலினுக்கு தமிழ் பற்று இருந்தால், மகன் என்றும் பாராமல் அமைச்சர் பொறுப்பில் இருந்து உதயநிதியை நீக்க வேண்டும்." – என்று தெரிவித்துள்ளார்.

பா.ம.க. தலைவர் அன்புமணி கருத்து வெளியிடுகையில்,

"ஆளுநர், துணை முதல்வரின் நிகழ்ச்சிகளில் நடந்தது மனித பிழைகள்தான். உள்நோக்கம் இருக்க வாய்ப்பு இல்லை. ஆனால் டி.டி. தொலைக்காட்சியில் நடந்ததை சர்ச்சை ஆக்கியதால், தற்போது இன்னொரு தரப்பினர் சர்ச்சை ஆக்குகின்றனர். இதுபோன்ற தவறு நடக்காமல் இருக்க, தமிழ்த்தாய் வாழ்த்து, தேசிய கீதம் ஆகியவற்றை பிழையின்றி பாட பயிற்சி அளிக்க வேண்டும்." – என்று தெரிவித்துள்ளார்.

இனிவரும் காலங்களில் முறையான பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு பாடவைக்க வேண்டும் என்று அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன், தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா ஆகியோர் வலியுறுத்தியுள்ளனர்.





# மாபெரும் அரசியல் சரித்திரத்தை நாளை நிகழ்த்திக் காட்டுவோம்

## த.வெ.க. தலைவர் விஜய் அறிவிப்பு



"உங்களின் பாதுகாப்பான பயணத்தை எண்ணியபடியே மாநாட்டுக்கு வருவேன். நீங்களும் அதை மனதில் வைத்தே வாருங்கள். அப்படித்தான் வரவேண்டும். நாளை நமது மாநாட்டில் சந்திப்போம். மாபெரும் அரசியல் சரித்திரத்தை நிகழ்த்திக் காட்டுவோம்."

– இவ்வாறு தமிழக வெற்றிக்கழகத்தின் தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

நடிகர் விஜய் ஆரம்பித்துள்ள தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநாடு நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகிறது. விழுப்புரம் மாவட்டத்தில் இந்த மாநாடு நடைபெற உள்ள நிலையில், இதற்கான ஏற்பாடுகள் தீவரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில், மாநாட்டுக்கு வரக்கூடிய தொண்டர்களின் நலனை கருத்தில் கொண்டு விஜய் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"பெயரைப்போல சில விசயங்களைத் திரும்பத் திரும்பச் சொல்லியே ஆகவேண்டும். அப்படித்தான் கடிதங்களில் சொன்னதையே இங்கு மீண்டும் வலியுறுத்தப்போகிறேன்.

காரணம், எல்லா வகைகளிலும் எனக்கு நீங்களும் உங்கள் பாதுகாப்புமே முக்கியம். ஆகவே, மாநாட்டுப் பயணப் பாதுகாப்பில் நீங்கள் அனைவரும் மிகக் கவனமாக இருக்க வேண்டும். இருசக்கர வாகன பயணத்தை தவிர்த்தல் நன்று. உங்கள் பாதுகாப்புக் கருதியே இதைச் சொல்கிறேன். அதே போல, வருகிற வழிகளில் பொது மக்களுக்கோ போக்குவரத்திற்கோ இடையூறு செய்யாமல் வரவேண்டும்.

போக்குவரத்து நெறிமுறைகளில் கவனம் செலுத்துவதோடு, மாநாட்டுப் பணிக்கானக் கழகத் தன்னார்வலர்கள் மற்றும் தனியார் பாதுகாவல் படைக்கு ஒத்துழைப்பு நல்குவதோடு, மாநாடு சார்ந்து காவல்துறையின் பாதுகாப்பு நெறிமுறைகளுக்கும் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். உங்களின் பாதுகாப்பான பயணத்தை எண்ணியபடியே மாநாட்டுக்கு வருவேன். நீங்களும் அதை மனதில் வைத்தே வாருங்கள். அப்படித்தான் வரவேண்டும். நாளை நமது மாநாட்டில் சந்திப்போம். மாபெரும் அரசியல் சரித்திரத்தை நிகழ்த்திக் காட்டுவோம்." எனத் தெரிவித்துள்ளார்.



# ஈரான் மீது தாக்குதலை தொடங்கியது இஸ்ரேல்

ஈரான் தலைநகர் தெஹ்ரான் பகுதியில் பல வெடிப்பு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

தெஹ்ரானின் மேற்கு பகுதியில் 7 வெடிப்பு சம்பவங்கள் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தநிலையில் அங்குள்ள இராணுவ இலக்குகள் மீது தாக்குதல் நடத்துவதாக இஸ்ரேல் இராணுவம் அறிவித்துள்ளது.

கடந்த காலங்களில் ஈரான் நடத்திய தாக்குதலுக்குப் பதில் வழங்கும் நோக்கில் தாக்குதல் நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் நிலைமையை அவதானித்து வருவதாக ஈரான் அறிவித்துள்ளது.

அதேநேரம், ஈரான் தரப்பிலிருந்து உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

அத்துடன் இந்த தாக்குதலுக்கு இஸ்ரேல் பயன்படுத்திய ஆயுதங்கள் உள்ளிட்ட தகவல்களும் வெளியாகவில்லை.


# போர் விமானங்கள் மீளத் திரும்பின!



ஈரான் மீது தாக்குதல் நடத்துவதற்கு அனுப்பப்பட்ட சகல போர் விமானங்களும் மீளத் திரும்பியுள்ளதாக இஸ்ரேல் அறிவித்துள்ளது.

ஈரான் தலைநகர் தெஹ்ரானின் மேல் மற்றும் தெற்குப் பகுதிகளில் உள்ள இராணுவ இலக்குகள் மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதலை நடத்தியுள்ளது.

அண்மையில் இஸ்ரேல் மீது ஈரான் நடத்திய ஏவுகணைத் தாக்குதல்களுக்குப் பதிலளிக்கும் வகையில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.




# வான்பரப்பை மூடிய ஈராக்!

ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ள நிலையில் ஈராக் தமது வான்பரப்பை மறுஅறிவித்தல் மூடியுள்ளது.

மறுஅறிவித்தல் வரை விமானப் போக்குவரத்தையும் நிறுத்துவதாக ஈராக் அறிவித்துள்ளது.

முன்னதாக இஸ்ரேலும் ஈரானும் தங்களது வான்பரப்பை மூடியுள்ளன.

இந்தநிலையில் ஈராக்கும் தமது வான்பரப்பை மூடியுள்ளது.

பக்கங்கள் 03

# கனடா முரசு

சனிக்கிழமை 26/10/2024

## மொன்றியலில் இடம்பெற்ற தீ விபத்தில் சிக்கி இருவர் பலி

மொன்றியலில் இடம்பெற்ற தீ விபத்தில் இரண்டு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மொன்றியலின் கொசட் பகுதியில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 02



# ட்ரூடோ 4 நாள்களுக்குள் பதவி விலக வேண்டும்!

## எம்.பி.க்கள் காலக்கெடு

**கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ 4 நாள்களுக்குள் பதவி விலக வேண்டுமென எம்.பி.க்கள் கெடு விதித்துள்ளனர் என கூறப்படுகின்றது.**

**கனடாவில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான லிபரல் கட்சியின் செல்வாக்கு மக்களிடையே சரிந்து வருகிறது.**

**இது கடந்த ஜூன் மற்றும் செப்டம்பர் மாதங்களில் நடைபெற்ற இடைத் தேர்தல்களில் எதிரொலித்தது. இடைத் தேர்தல் நடந்த 2 முக்கிய தொகுதிகளிலும் லிபரல் கட்சி தோல்வியை சந்தித்தது.**

இந்த தோல்விக்கு பிரதமர் ட்ரூடோ தான் காரணம் என குற்றம் சாட்டிய லிபரல் கட்சி எம்.பி.க்கள் சிலர் அவருக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தியுள்ளனர்.

இந்நிலையில் லிபரல் கட்சி எம்.பி.க்கள் ரகசிய கூட்டத்தை நடத்யதுடன், பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலக வேண்டுமென வலியுறுத்தினர்.

4 நாள்களுக்குள் (நாளை மறுதினம்) ட்ரூடோ பிரதமர் பதவியை இராஜினாமா செய்ய வேண்டுமென எம்.பி.க்கள் கையெழுத்திட்ட கடிதம் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவிடம் கொடுத்துள்ளனர் என கூறப்படுகின்றது.

அதோடு ட்ரூடோ மீண்டும் தேர்தலில் போட்டியிடக்கூடாது என்று எம்.பி.க்கள் வலியுறுத்தியுள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

# கமலா ஹரிஸிற்கு கனடாவில் ஆதரவு

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் ஜனநாயகக் கட்சி வேட்பாளர் கமலா ஹரிஸிற்கு கனடாவில் கூடுதல் ஆதரவு காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடியர்களுக்கு வாக்களிப்பதற்கு சந்தாப்பம் கிடைத்தால் என்ற அடிப்படையில் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டுள்ளது.

இதன் போது கமலா ஹரிஸிற்கு அதிகளவான கனடியர்கள் ஆதரவினை வெளியிட்டுள்ளனர்.

கருத்துக் கணிப்பில் பங்குபற்றியவர்களில் 64 வீதமானவர்கள், சந்தர்ப்பம் கிடைத்தால் கமலா ஹரிஸிற்கு ஆதரவாக வாக்களிப்பதாக தெரிவித்துள்ளனர்.

55 வயதுக்கும் மேற்பட்ட பெண்கள் கூடுதல் எண்ணிக்கையில் இவ்வாறு ஹாரிஸிற்கு ஆதரவாக கருத்து வெளியிட்டுள்ளனர்.








## மொன்றியலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவல் அறிந்த தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்துள்ளனர்.

இதன் போது வீட்டில் தீயில் சிக்கியிருந்த இரண்டு பேரை தீயணைப்புப் படையினர் மீட்டுள்ளனர்.

இதனையடுத்து, ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இருவரும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களின் விபரங்கள் எதனையும் பொலிஸார் இதுவரையில் வெளியிடவில்லை.



# ஒன்றாரியோ மாகாணத்தில் மருத்துவ கற்கைக்கு வெளிநாட்டு மாணவர்களுக்கு அனுமதி இல்லை

வெளிநாட்டு மாணவர்களுக்கு அதிர்ச்சி ஏற்படுத்தக் கூடிய அறிவிப்பினை ஒன்றாரியோ மாகாண அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

இதற்கமைய, எதிர்வரும் 2026 ஆம் ஆண்டிலிருந்து ஒன்றாரியோ மாகாணத்தில் மருத்துவ கற்கைகளுக்காக வெளிநாட்டு மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

95 வீதமான சந்தர்ப்பம் ஒன்றாரியோ மாகாண மாணவர்களுக்கு வழங்கப்படும் எனவும், 5 வீதம் ஏனைய மாகாண மாணவர்களுக்கு வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

குடும்பநல மருத்துவர்களாக எதிர்காலத்தில் சேவையாற்றுவதாக உறுதியளிக்கும் மாணவர்களுக்கு ஒன்றாரியோ அரசாங்கம் கூடுதல் சலுகைகளை வழங்குவதாக அறிவித்துள்ளது.

டக் ஃபோர்ட் தலைமையிலான அரசாங்கம் வெளிநாட்டு மாணவர்களை மருத்துவ கல்லூரிகளில் சேர்ப்பதில்லை என தீர்மானத்தை எடுத்துள்ளது.




# தீ விபத்தில் சிக்கி சிசு பலி; பெண் ஒருவர் படுகாயம்

கனடாவில் இடம்பெற்ற தீ விபத்துச் சம்பவத்தில் சிசு வொன்று கொல்லப்பட்டுள்ளதுடன், பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

ரொறன்ரோவின் எக்லின்டன் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

தீயணைப்புப் படையினர் தீயை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

காயமடைந்த பெண்ணும் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

தீ விபத்து ஏற்படும் போது ஆறு பேர் வீட்டில் இருந்தனர் எனவும், தீ விபத்து காரணமாக சிலர் வெளியேறியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தீ விபத்திற்கான காரணங்கள் எதுவும் இதுவரையில் கண்டறியப்படவில்லை.